# மாகாணக்கல்வித் திணைக்களம்
# வடக்குமாகாணம்
## சித்திரக்கலை

தரம் 09 சுய கற்றல் கையேடு 2020

### வேடமுகமூகமூடிக்கலை

1. வேடமுகமூடிக் கைத்தொழில் பிரசித்திபெற்ற இடங்களைக் குறிப்பிடுக.

   தென் மாகாணத்தின் அம்பலாங்கொடை பிரதேசம் மற்றும் மதுகம, பெந்தர, மிரிஸ்ஸ

2. வேட முகமூடிக் கைத்தொழிலுக்கு பயன்படும் மூலப்பொருட்கள் எவை?

   கடல் மாங்காய், தேமா

3. வேட முகங்கள் நிர்மாணிக்கப்படும் படிமுறைகள்





நாக இராட்சதம்



குருளு இராட்சத

   1) மரக்குற்றிகளை வெட்டி பட்டை உரித்து துண்டுகளாக்கப்படும் செயற்பாடு (கனகெப்பீம)
   2) மரப்பலகையின் வைரமான பகுதிகள் வெட்டி தட்டையாக்கப்படும். (பாயம் பேகீம)
   3) பலகை மீது முகமூடியின் பருமட்டான வடிவம் குறித்து செதுக்கப்படும்.
   4) செதுக்குவதற்கும் வர்ணமிடுவதற்கும் இளவெயில் வைத்து உலர வைக்கப்படும். (கிரிஹிந்தவீம)
   5) முகத்தின் வடிவம் வெளிக்கொண்டுவரப்பட்டு கண் போன்ற மென்மையான பகுதிகள் குறித்தல். (லக்குணு கெப்பீம்)
   6) இறுதியாக தாடி, மீசை, முடி போன்றவை வைத்து ஒட்டப்படும்.

4. வேட முகமூடிகளைப் பாதுகாக்க வர்ணம் தீட்டமுன்னர் ஆரம்பத்தில் பயன்படுத்தப்படுவது எது?

   மகுலு மெட்டி



கொற சன்னி



தேவ சன்னி



நாக சன்னி

5. சாதுலிங்கத்தில் இருந்து பெறப்படும் வர்ணம் எது?

   சிவப்பு

6. தொரண எண்ணெய் எதற்காகப் பயன்படுத்தப்படுகின்றது?

   பளபளப்புத் தன்மைக்கும், நீண்டகாலம் பயன்படுத்துவதற்கும்.

7. வேட முகமூடிகளின் வகைகளைக் குறிப்பிடுக.

   அரச முகம், இராட்சத முகம், இயக்கர் முகம், நாககன்னிமுகம், சன்னி முகம், கோல முகம்.



கிராமத்து விதான ஆரச்சி



ஹேவா கோலம் (படையினரின்)



பறங்கிக் கோலம்

## இந்து ஆலங்களில் மரச் செதுக்கல்கள்

1. வாகன வகைகள் எவை?

   அ) வடத்தினால் இழுத்துச் செல்லப்படுவன.

   ஆ) மனிதர்களால் தூக்கிச் செல்லப்படும் வாகனங்கள்.

2. வடத்தினால் இழுத்துச்செல்லப்படும் வாகனங்கள் எவை?

   தேர், மஞ்சம், கைலாச வாகனம். சப்பறம்

3. மனிதர்களால் தூக்கிச் செல்லப்படும் வாகனங்கள்

   சிங்க வாகனம், நாக வாகனம், அன்ன வாகனம், எலி வாகனம், மயில் வாகனம், குதிரை வாகனம்.

**சிங்க வாகனம்**




**காணப்படும் இடம்** : யாழ்ப்பாணம் மூளாய் சித்தி விநாயகர் ஆலயம்

**செதுக்கிய சிற்பி** : வட்டுக்கோட்டை சின்னட்டியார் ஆசாரியார்

**கலைத்துவப் பண்புகள்** : துருத்தி நின்ற இரு விழிகள், சிவந்த முரசுடைய திறந்த வாய், நெடுத்த பல் வரிசை, வில் போல வளைந்த வால், சீற்றம் கம்பீரம்

**குதிரை வாகனம்**




**காணப்படும் இடம்** : நல்லூர் கந்தசாமி ஆலயம்

**செதுக்கிய சிற்பி** : திருவிடை மருதூர் கோவிந்த சாமி

**கலைத்துவப் பண்புகள்** : நேரான முகம், ஆக்ரோசமான பாயும் தோரணை, கம்பீரம், மிடுக்கு

**மஞ்சம்**





**காணப்படும் இடம்** : இணுவில் கந்தசாமி ஆலயம்

**செதுக்கிய காலம்** : 1909 – 1910

**ஊடகம்** : மரம்

**கலைத்துவப் பண்புகள்** : மேல்ப்பகுதி, நடுப்பகுதி, கீழ்ப்பகுதி என மூன்றாக வகுக்கப்படும்.

**கீழ்ப்பகுதி –** கடவுள்கள், விலங்குகள், பறவைகள், பூதங்கள், தாமரை, பலாப்பெத்தி உள்ளது.

**நடுப்பகுதி –** கடவுள் வைக்கும் இடம் (தேவாசனம்), மேல்ப்பகுதியையும், தேவாசனப்பகுதிகளும் பவளக்கால்கள் மூலம் இணைக்கப்படும். வெளிப்புறமாக நீண்ட யாழிகள் காணப்படும்.

**மேற்பகுதி** - இது விமானம் எனவும், கோபுரம் போல பல அடுக்குகளை உடையது. விமான அடுக்குகளில் தெய்வஉருவங்கள், விலங்குருவங்கள், மலர்கொடி அலங்காரங்கள் காணப்படும்.

## தேர்

1. தேர்களின் வகைகள் எவை?

   **மூலத்தேர்**: கீழிருந்து மேலே வரைக்கும் ஒட்டுமொத்தமாக நிரந்தரமாக அமைக்கப்பட்டிருக்கும்.

   **கட்டுத்தேர்**: கீழ்புறம் மட்டும் கொண்டது. நடுப்புறம், மேற்புறம் தேரோட்டத்தின்போது அமைக்கப்படும். துணிகள், கொடிகளைக் கொண்டு அலங்கரிக்கப்படும்.



**காணப்படும் இடம்** : கொக்கட்டிச் சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயம்

**தேரின் கீழ்ப்பகுதி** : புராணக் கதைகள், கடவுள்கள், விலங்குகள், பறவைகள், பூதங்கள், குள்ள வடிவங்கள் காணப்படும்.

## அரக்குக் கைத்தொழில்

1. அரக்குக் கைத்தொழிலுக்கு பிரசித்தி பெற்ற இடங்கள் எவை?

   மாத்தளை - ஹப்புவித, தங்கல்லை – அங்குல்மடுவ, கண்டி - கூரிகடுவ, பலாங்கொடை – பல்லேகந்த

2. அரக்குக் கைத்தொழிலை மேற்கொள்வோர் எவ்வாறு அழைக்கப்படுவர்?

   ஹங்கிடியன்

3. இக் கைத்தொழிலுக்கு பயன்படும் மூலப்பொருட்கள் எவை?

   லாக்ஷா எனப்படும் ஒரு வகைப்பூச்சியினத்தில் இருந்து பெறப்படும் பிசின்

4. அரக்குத் தயாரிக்கப்படும் முறை

   மரப் பட்டைகளில் இருந்து பெறப்பட்ட பிசினை வெய்யிலில் உலரவிடப்படும். அரக்கினை கூரான ஆயுதத்தினால் சுரண்டி எடுத்து பருத்தித் துணியில் இறுகக்கட்டி அதனை அடுப்பின் மேல் பிடித்து உருகும் போது தூய அரக்கை பிழிந்து எடுக்க வேண்டும்.

5. சாயம் பெறப்படும் முறை யாது?
   சிவப்பு – சாதுலிங்கத் தூள்
   கறுப்பு – விளக்குக்கரி அல்லது ‘கெக்குணகரி’
   மஞ்சள் - ஹரியல் (ஒருவகை மண்)
   பச்சை – மஞ்சள் ஹரியல்லுடன் நீலம் சேர்க்கப்படும்.

6. அரக்கு கைத்தொழிலை எத்தனை வகைப்படுத்தலாம்.

அ) **நகவேலை**



வெப்பமேற்றிய அரக்கினை விரல்களால் இழுத்து நார்கள் பெறப்படுகின்றன. ஒரு வர்ணம் காய்ந்த பின்னர் பல வர்ணங்களை இட்டு விரல் நகத்தினால் அலங்காரங்கள் இடப்படுகின்றன. இது விரல் நகவேலை அல்லது நியபொத்வெட எனப்படுகின்றது,

ஆ) **பட்டரை வேலை**



பட்டறை மீது வைக்கப்படும் பொருள் சுற்றிவரும் போது வெப்பமேற்றிய அரக்கு அதன்மீது சீரான முறையில் பிடிக்கப்படுவதனால் ஒட்டிக்கொள்ளும், அத்தோடு பெருமளவிலான உற்பத்திப்பொருட்களிற்கு அரக்கு பூசப்படுவது பட்டரையிலாகும்.

7. அரக்குக் கைத்தொழில் உபயோகிக்கப்படும் அலங்காரங்கள் எவை?

வெல்பொத்த, கல்பிந்து, அரசிலை, குந்திரிக்கன், பலாப்பெத்தி, தனியிழை, ஈரிழை

8. அரக்கு உபயோகித்து அலங்கரிக்கப்படும் பண்டங்கள் எவை?







ஆலவட்டத்தின் கைப்பிடி, கொடிகளின் கைப்பிடி, ஈட்டிப்பிடி,
ஊன்றுகோல், விசிறியின் கைப்பிடி, உடுக்கை

## மோடிப்படுத்தப்பட்ட நாடகங்கள்

1. மோடிப்படுத்தப்பட்ட நாடகங்களின் பண்புகள்

நாடகத்தின் அனைத்து உரையாடல்களும் பாடல் வடிவில் அமைந்தவையாகவும், இராகத்துடன் உரையாடல்கள் இருக்கும். அத்துடன் நாடகத்தின் அனைத்து அசைவுகளும், நடைகளும் இசைக்கேற்றவாறு சந்தத்துடன் நடைபெறும்.

உ-ம் சிங்கபாகு, மனமே, பெரஹனட்



'மனமே' எனும் மேடைநாடகத்தின் ஒருகாட்சி



'சிங்கபாகு' எனும் மேடை நாடகத்தின் ஒரு காட்சி



பெரஹனட் மேடை நாடகத்தின் ஒருகாட்சி

# S.P சாள்ஸ்

1. S.P சாள்ஸின் கலைப்படைப்புக்களைக் குறிப்பிடுக.

பாராளுமன்ற செங்கோல், தேசியக் கொடி, தேசிய இலட்சிணை

2. **தேசியக்கொடி**



**நிர்மாணிக்கப்பட்ட ஆண்டு** : 1949

**இதன் கருத்து** : இலங்கையின் தனித்துவத்தினையும், அபிமானத்தினையும் பிரதிபலிக்கின்றது.

**தேசியக் கொடியின் வர்ணங்களும் குறியீடுகளும்**

| | |
|---|---|
| வாளேந்திய சிங்கம் | - மகிமை, மேன்மை |
| வாள் | - இறையாண்மை |
| நான்கு அரசு இலைகள் | - நான்கு வித நற்பண்புகள் (அன்பு, கருணை, சமத்தவம், அனுதாபம்) |
| சிவப்பு | - சிங்களவர் |
| செம்மஞ்சள் | - தமிழர் |
| பச்சை | - முஸ்லீம்கள் |

3. **செங்கோல்**



அ) பாராளுமன்றத்தின் சபாநாயகருடைய, மந்திரிசபையின் அதிகார பலத்தைக் குறிப்பது எது?

செங்கோல்



ஆ) செங்கோல் செய்யப்பட்ட ஆண்டு, கலைஞரைக் குறிப்பிடுக.

1949, S.P சாள்ஸ்

இ) செங்கோலின் பண்புகளைக் குறிப்பிடுக.

**நீளம்** - 122cm

**ஊடகம்** - கருங்காலி மரம், தங்கம், வெள்ளி, சூடாமாணிக்கம்

**அலங்கார வடிவங்கள்** - பின்னரமலர், பலாப்பெத்தி, தாமரை இதழ்

**நீதி, செழுமை இன் அடையாளம்** - சூரியன், சந்திரன், தர்மசக்கரம், நிறைகுடம்

## பத்திரிகை சித்திரக்கலை ஓவியர்கள்

பந்துல ஹரிச்சந்திர, தயா ராஜபக்கஷ, ஜனக ரத்னாயக்க

### ❁. பந்துல ஹரிச்சந்திர





1. இவரது முதற் படைப்பு எது? சுலசா
2. இவர் முதலில் ஒரே நாளில் வாசிக்கக் கூடிய ஜாதகக் கதையை வரைந்த பத்திரிகை எது? தினமின 1962
3. இவரின் பத்திரிகைக் கதைக்களுக்கான கருப்பொருட்கள் யாது?
   யாதகக்கதைகள், பௌத்த மதக் கதைகள், பைபிள் கதைகள், இலங்கையின் வரலாறுகள்

### ❁ தயா ராஜபக்கஷ





1. இவர் முதல் சித்திரக் கதையை வரைந்த பத்திரிகையை குறிப்பிடுக.

   1966 இல், சிலுமின பத்திரிகையில்

2. இவருடைய பிரபலமான சித்திரக்கதைகள் எவை?

   கினிகத் கிரீடய, ஹுலவாலி, சாமபுராணய, அனுபமா, ரத்தா, ஜாதி தக்வா

3. இவருடைய அதிகமான கதைகளின் கருப்பொருட்கள் எவை?

   சமூகச் சூழலின் தன்மையை பிரதிபலிப்பதாக காணப்படுகின்றது.

### ❁ ஜனக ரத்னாயக்க





1. இவர் பத்திரிகைச் சித்திரக்கதை ஓவியங்கள் வரையப்பட்ட காலப்பகுதி யாது?

   1971-1979 வரை தவச லேக்ஹவுஸ், மல்ரி பெக்ஸ் நிறுவனங்களில் கடமையாற்றினார்.

2. இவரின் பிரபல்யமான சித்திரக் கதைகளைக் குறிப்பிடுக.

   சாரங்கா, கபலென் லிபட்ட, சுசிமா, அத்திக்கா மல, கலு பரவியோ

3. இவரது ஆங்கங்களின் கருப்பொருட்கள் எவை?

   இளம் பருவத்தினரின் நவநாகரீகம், வாகனங்கள், மேற்கத்திய திரைப்படங்களில் வரும் வாகனங்கள், போர் விமானங்கள்

## சந்திரவட்டக்கல்

1. சந்திரவட்டக்கல் காணப்படும் இடங்கள் எவை?

   தாதுகோபங்கள், அரண்மனைகளின் வாயிலில் படிக்கட்டுக்களின் முன்னால் அரைவட்டமாக அமைக்கப்பட்டிருக்கும்.

2. சந்திரவட்டக்கல்லின் மறுபெயர்கள் எவை?

   சூரிய சந்திரகல, அடசந்த பகன, பாட்டிக்கா

### ❁ அனுராதபுரகால சந்திரவட்டக்கல்



**இனங்காணல்** : அனுராதபுர காலச் சந்திரவட்டக்கல்

**ஊடகம்** : கருங்கல்

**புடைப்புமுறை** : அரைப்புடைப்பு

**அமைத்துள்ள இடம்** : இராணி மாளிகை வாசலில்

**காணப்படும் உருவங்கள்** : அரைத்தாமரை, அன்னம், இலை கொடி அலங்காரம், மிருக வரிசை (சிங்கம். எருது, குதிரை, யானை), தீச்சுடர்

### ❁ பொலநறுவைக்கால சந்திரவட்டக்கல்



**இனங்காணல்** : பொலநறுவைக் காலச் சந்திரவட்டக்கல்

**ஊடகம்** : கருங்கல்

**அமைத்துள்ள இடம்** : பொலநறுவை வட்டதாகே

**காணப்படும் உருவங்கள்** : அரைத்தாமரை, இலை கொடி அலங்காரம், குதிரை வரிசை, யானை வரிசை, அன்னம் வரிசை, தீச்சுடர்

3) அனுராதபுரகாலத்திலிருந்து வேறுபடக் காரணம் யாது?

   சோழர்காலச் செல்வாக்கிற்கு உட்பட்டதனால் எருது வடிவம் நீக்கப்பட்டுள்ளது.

**கண்டிநகர்க்காலச் சந்திரவட்டக்கல்**



**இனங்காணல்** : கண்டிநகர்க் காலச் சந்திரவட்டக்கல்

**வடிவம்** : முக்கோண வடிவம்

**அமைத்துள்ள இடம்** : கண்டி தலதா மாளிகை

**காணப்படும் உருவங்கள்** : முழுத்தாமரை, இலை கொடி அலங்காரம்,

### காவற்சிலை

1. காவற்சிலைகள் காணப்படும் இடங்களைக் குறிப்பிடுக.

   வணக்கஸ்தலங்களுக்கு நுழையும் படிவசையின் அடிவாரத்தில் சந்திரவட்டக்கல்லுக்கு இருபுறத்திலும் காணப்படும் செதுக்கல் சிலையாகும்.

2. காவற்கல்லின் படிமுறை வளர்ச்சியினைக் குறிப்பிடுக.

   செதுக்கலின்றிய காவற்கல், புன்கலசத்துடனான காவற்கல், பைரவ காவற்கல், நாகபடக் காவற்கல், நாகராஜ காவற்கல்

3. காவற்கல்லின் ஊடகம் யாது?

   கருங்கல், செங்கல், சாந்து



A



B

**இனங்காணல்** : A இரத்தினப்பிரசாத காவற்கல் B வட்டதாகே காவற்கல்

**காலப்பகுதி** : A அனுராதபுரகாலம் B பொலநறுவைக்காலம்

**ஊடகம்** : A கருங்கல் B கருங்கல்

**புடைப்புமுறை** : A அரைப்புடைப்பு B அரைப்புடைப்பு

**சிறப்பம்சம்** : அனுராதபுர, பொலநறுவைக் காலங்களில் நாகராஜ காவற்கல் மிக உயர்வான கலைப்பண்புகளைக் கொண்டுள்ளது. இவற்றுள் ஏனைய காவற்கலின் வடிவங்களும் இணைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

## கைப்பிடி வரிசை


இரத்தின பிரசாதயவின் கைப்பிடி


பொலனறுவை வட்டதாகேயின் கைப்பிடி


கடலாதெனிய விகாரையின் கைப்பிடி

1. கைப்பிடி வரிசைகள் காணப்படும் இடங்களைக் குறிப்பிடுக.

   வணக்கஸ்தலங்களுக்கு நுழையும் படிவசையின் இருபுறத்திலும் கைப்பிடி அமைப்பில் உருவாக்கப்பட்ட பாரிய இரு சுவர்களாகும்.

2. கைப்பிடியின் அமைப்பினைக் குறிப்பிடுக.

   மகரவாயில் இருந்து வெளிவரும் சந்தத்துடனான நீரலை, தும்பிக்கை, தீச்சுடர் போன்ற அமைப்புக்களை நுணுக்கமாக செதுக்கிய அருமையான படைப்பாகும்.

3. இதன் பக்கச்சுவர்களில் காணப்படும் உருவங்கள் எவை?

   சிம்மம், கஜசிங்கம், பெண் உருவங்கள்

4. கொறவாக்கல்லின் ஊடகம் யாது?

   அனுராதபுரம், பொலநறுவை - கருங்கல் , கண்டி – செங்கல், சாந்து

## படிவரிசை


அநுராதபுர இராணிமாளிகையின் படிவரிசை


பொலநறுவை வட்டதாகேயின் படிவரிசை

1. படிவரிசை அமைக்கப்படுவதன் நோக்கம் யாது?

   கீழ்த் தளத்தில் இருந்து மேல்த் தளத்திற்குச் செல்வதற்கும், சந்திரவட்டக்கல், காவற்கல், கைப்பிடிவரிசை என்பவற்றை இணைக்கும் வகையில் அமைந்துள்ளது.

2. படிவரிசையில் காணப்படும் அலங்கார வடிவங்களைக் குறிப்பிடுக.

   குள்ள உருவங்கள், வஜ்ஜிர உருவங்கள், தாமரை இதழ்கள், கொடிவலை

**வாகற்கடம்**




மிகிந்தலை கண்டக சைத்தியத்தின் வாகல்கடம்

கீழுள்ள செயற்பாட்டுப்படிவத்தினை வாசித்து வினாக்களுக்கு விடை தருக.

- தாதுகோபத்துடன் இணைந்து அதன் நாற்றிசையிலும் அமைக்கப்பட்ட சிறப்புவாய்ந்த கட்டட நிர்மாணிப்பென இதனைக் குறிப்பிடலாம்.
- வாகல்கடம் 'ஆயக்க', 'ஆயிக்க' எனும் பெயர்களாலும் அழைக்கப்படுகின்றன.
- தாதுகோபத்துக்கு வலிமை, அழகு என்பன தோற்றுவிக்கப்படுகின்றதெனக் கருதலாம்.
- தாதுகோபத்தின் நாற்றிசைகளிலும் மலராசனத்துடன் இணைந்து இது நிர்மாணிக்கப்பட்டுள்ளது.
- வாகல்கடத்தின் அடித்தளம் கல்லால் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.
- மேற்பகுதியில் காணப்படும் விமானங்கள் செங்கல்லினால் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. கல்லால் அமைக்கப்பட்ட கீழ் பகுதியில் மணியுருக்கட்டு ('பொரதம்') எனப்படும் பகுதிகள் பல உள்ளன. யானை, மகரம், முயலகன்கள், அன்னம் ஆகிய விலங்குருக்களை இவை கொண்டுள்ளன.
- செங்கல்லால் அமைக்கப்பட்ட சில வாகல்கடங்களில் மூன்று விமானங்கள் காணப்படுகின்றன. அவற்றுள் புத்தரின் உருவம், தெய்வ உருவம் என்பன வைக்கப்பட்டுள்ளதாகக் கருதப்படுகிறது.
- வாகல்கடத்தின் இருபுறத்தில் விசித்தரமான செதுக்கல்களாலான கற்றூண்கள் காணப்படுகின்றன. இவை கல்பலதா, ஜீவன விருட்சம், சுயாதீனமான விலங்கு அலங்கராங்களைக் கொண்டுள்ளன.
- அக் கற்றூண்கள் மீது யானை, குதிரை, பசு, சிம்மம் எனும் உருவங்கள் உள்ளன. இவை நான்கு திசைகளையும் குறிப்பதாக நம்பப்படுகிறது.

பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்குக.

1. வாகல்கடம் என்பது எதனைக் குறிக்கிறது?
2. வாகல்கடத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள விலங்குருவங்கள் எவை?
3. உயர்வான கலைப்பண்புகளையுடைய வாகல்கடம் உள்ள இடத்தைக் குறிப்பிடுக.
4. தற்போது பாதுகாக்கப்பட்டுள்ள பொலறுவைக் காலத்து வாகல்கடம் ஒன்றைக் குறிப்பிடுக.
5. வாகல்கடத்துக்கு கூறப்படும் வேறு இரு பெயர்களைக் குறிப்பிடுக.
6. வட்டதாகே என்றால் என்ன?
7. இலங்கையில் நிர்மாணிக்கப்பட்ட முதல் வட்டதாகே எது?
8. பெரிய சைத்தியங்கள் அல்லது சிறியளவிலான சைத்தியங்களை சுற்றியா வட்டதாகே அமைக்கப்பட்டுள்ளது?
9. தற்போது இலங்கையில் காணப்படும் வட்டதாகே சிலவற்றைக் குறிப்பிடுக.
10. வாகல்கட, வட்டதாகே ஆகியவை நிர்மாணிக்க உபயோகப்படுத்திய ஊடகங்களைக் குறிப்பிடுக.

**வட்டதாகே**



தூபாராம வட்டதாகே



திரியாய வட்டதாகே



மெதிரிகிரிய வட்டதாகே



பொலனறுவை வட்டதாகே

1. வட்டதாகே எனப்படுவது யாது?

   தாதுகோபத்தினை முழுமையாகப் பாதுகாப்பதற்காக அதனைச் சுற்றி அமைக்கப்படும் மனை வட்டதாகே எனப்படும்.

2. வட்டதாகேயின் மறுபெயர்கள் எவை?

   தூபகர, வேதிகர, சேகெய

3. இலங்கையில் முதன் முதலில் அமைக்கப்பட்ட வட்டதாகே எது?

   தூபராம வட்டதாகே

4. இலங்கையில் தற்போது காணப்படும் வட்டதாகேகள் எவை?

   தூபராம, மெதிரிகிரிய, பொலநறுவை, திரியாய

## பெண் உருவங்கள் அடங்கிய பாரம்பரிய அலங்காரங்கள்

**1. சதுர்நாரிப் பல்லக்கு**



நான்கு பெண் உருவங்களை இணைத்து பல்லக்கின் வடிவத்தில் ஒருங்கிணைக்கப்பட்ட நிர்மாணிப்பாகும். தலதா மாளிகையில் உட்கூரையில் உள்ளது

**2. பஞ்சநாரிக்கலசம்**



ஐந்து பெண்கள் குடத்தின் வடிவத்தில் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன. பாரம்பரியக் கைத்தொழிலும், யானைத் தந்தத்திலும் இதனைப் பயன்படுத்துகின்றார்கள்

**3. சப்தநாரிப் பல்லக்கு**



ஏழு பெண் உருவங்கள் பல்லக்கு வடிவில் ஒருங்கிணைத்து நிர்மாணிக்கப்பட்டுள்ளது. தலதா மாளிகையின் வெளி மாடத்தில் வரையப்பட்டுள்ளது.

**4. சப்தநாரி இரதம்**



ஏழு பெண்உருவங்களைக் கொண்டு நிர்மாணிக்கப்பட்ட இரதம் சப்தநாரி இரதம் ஆகும். தலதாமாளிகையின் வெளிப்புற மாடத்தில் வரையப்பட்டுள்ளது.

**5. நவநாரிக் குஞ்சரம்**



ஒன்பது பெண் உருவங்கள் தந்தத்துடன் உருவாக்கப்பட்ட யானையின் தோற்றத்தை வெளிப்படுத்துகின்ற படைப்பாகும். கண்டிநகர்க்கால ஓவியங்களிலும் செதுக்கல்களிலும் காணப்படுகின்றது.

**6. நாரிலதா மலர்**



தலையில் இருந்து இடுப்புவரை அழகிய நாரிலதா வடிவத்தினையும் இடுப்புக்குக் கீழே கொடி, பூ அலங்கார வேலைப்பாட்டினையும் கொண்ட வடிவமாகும். இது எம்பக்கேத் தேவாலயத்தில் மரச் செதுக்கலாகவும், புராதன விகாரைகளில் ஓவியமாகவும் காணப்படுகின்றது.

**விலங்கு உருங்கள் அடங்கிய பாரம்பரிய அலங்காரங்கள்**

**1. ரிஷபகுஞ்சரம்**



எதிரெதிரே நோக்கியிருக்கும் விதத்தில் யானையினதும், மாட்டினதும் தலைகள் ஒருங்கிணைத்து ரிஷபகுஞ்சரம் உருவாக்கப்பட்டுள்ளது. ரிதிவிகாரை, தலதாமாளிகை, எம்பக்கே தேவாலயத்தில் காணலாம்.

**2. கிஹிம்பி முகம்**



மகரதோரணத்தின் நடுவில் மேல் பகுதியில் அமைந்துள்ள கற்பனை வடிவம் ஆகும். வாய் அகன்றது. சிவப்பு நிற உதடுகள், கீழ் நோக்கிய விழிகள், வாயின் வெளியில் கொம்பு காணப்படுகின்றது.

**3. மகர உருவம்**



யானையின் தும்பிக்கை, சிங்கத்தின் முன்னங்கால்கள், முதலையின் பற்கள், குரங்கின் கண்கள், பன்றியின் காதுகள். மீனின் உடல், குருளாவின் இறகுகள் என்பவற்றைக் கொண்ட கற்பனை வடிவமாகும். கைப்பிடிச்செதுக்கல், மகரதோரணத்தில் காணப்படுகின்றது.

4.



புத்தர் சிலைகளின் பின்புறமாக கண்டிநகர் காலங்களில் மகரதோரணம் அமைக்கப்பட்டதைக் காணலாம்

5.





யானை, சிங்கம், குதிரை போன்ற கற்பனை விலங்குகளால் உருவானது. புராணக் கதைகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. அனேகமாக இந்துக்கோயிலில் காணப்படுகின்றது. பாதுகாப்பு, பலம் என்வற்றைக் காட்டுவதற்கு அமைக்கப்பட்டது.

பகுதி II

கீழுள்ள பொருட்கூட்டத் தொகுதியை ஒழுங்குபடுத்தி வரைந்து வர்ணம் தீட்டுக.







## பகுதி III

கீழுள்ள தலைப்புக்களில் ஓவியங்களை வரைந்து வர்ணம் தீட்டிக் கொள்க.

**கருத்து வெளிப்பாட்டுச் சித்திரங்கள்**



1. மழைநாள் ஒன்று
2. ஞாயிறு சந்தை
3. பாடசாலை விளையாட்டுப் போட்டி
4. பஸ்தரிப்பு நிலையம்
5. வியத்தகு வனம்
6. சரணாலயம் ஒன்றைப் பார்வையிடுவோர்.







**ஆக்க அலங்காரங்கள்**

1. விரிந்த குடை ஒன்றிற்கான அலங்காரம்
2. பாரம்பரிய அலங்கார உருவைக் கொண்டு கதவு ஒன்றிற்கான அலங்காரம்
3. பெண்களின் சீத்தைத் துணி ஒன்றிற்கான அலங்காரம்
4. சிறுவர்களுக்கு பொருத்தமான படுக்கைவிரிப்புக்கான அலங்காரம்

**கிரபிக் அலங்காரங்கள்**

1. குடிநீர் சுற்றுறைக்கான முகப்புரையொன்று
2. குழந்தைகளின் பால்மா கொள்கலன் போத்தல் ஒன்றிற்கான முகப்புரை
3. மென் பானவகைப் போத்தல் ஒன்றிற்கான முகப்புரை
4. சிறுவர் கதைப்புத்தகம் ஒன்றுக்கான முகப்பு அட்டை ஒன்றிற்கான நிர்மாணிப்பு

தொகுப்பு : ப.பிரதீபன்
கிளி/பூநகரி மத்திய கல்லூரி
கிளிநொச்சி